# ஏப்ரல் 20

## *புனித சிங்கராயர் IX (1002-1059)*

## *ST LEO IX*

இவர் 25-ஆம் வயதில் ஆயரானார். 20 ஆண்டுகளாக மறை மாவட்டத்தை ஆண்டு வந்தார். இந்தக் காலத்தில் இவருக்கு ஏராளமான உபத்திரவங்கள் ஏற்பட்டது. ஒருமுறை திருயாத்திரையாக உரோமைக்குச் சென்றபோது நலனுக்காக இவர் பல நாடுகளுக்கு பிரயாணம் செய்தார். எங்கும் பரவியிருந்த ஊழல்கள் பலவற்றை ஒழித்துக்கட்டினார். தகுதியற்ற குருக்களை பதவியிலிருந்து இறக்கினார். பல நாடுகளிலிருந்து ஆயர்களை சேர்த்து ஒரு சங்கத்தைக் கூட்டினார். அங்கு பாப்புவின் உரையைக் கேட்கும்படி மக்கள் திரள் திரளாய் சென்றனர். எதிரிகள் நாட்டின்மீது படையெடுத்தார்கள். இவருடைய துருப்புகளைத் தோற்கடித்து இவரையும் கைது செய்து 9 மாதங்கள் சிறையில் வைத்திருந்தனர். விடுதலை பெற்றபின் போரில் அநேகர் உயிரிழந்திருந்ததைப்பற்றி இவர் மிகுந்த கவலைப்பட்டார். புனித இராயப்பர் பேராலயத்தின் நடுப்பீடத்தின் முன் இவர் உயிர் நீத்தார்.

### சிந்தனை:

நாம் கடவுளுடைய மகனோடு ஒரே உடலாய் இருக்கிறோம். அவர் நம்மை வானகத் தந்தையின் வலது பக்கத்தில் வைப்பார். (புனித சிங்கராயர் IX)

### செபம்:

ஆண்டவரே, எதிரிகளின் கையிலிருந்து திருச்சபையைக் காத்தருளும்.


CLVI
S. LEO IX.